## டெல்லியை போல சென்னையிலும்

# டிரைவர் இல்லாத 25 மெட்ரோ ரெயில்களை இயக்க திட்டம்

சென்னை, ஜன.6-

டெல்லியை போல சென்னையிலும் டிரைவர் இல்லாத 25 மெட்ரோ ரெயில்களை இயக்க மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### டிரைவர் இல்லாத ரெயில்

சென்னையில் 118.9 கி.மீ. தூரத்திற்கு 2-வது கட்டமாக மெட்ரோ ரெயில் பாதை மற்றும் ரெயில் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகளில் மெட்ரோ ரெயில் நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த பணிகளை 2026-ம் ஆண்டுக்குள் முடித்து ரெயில் போக்குவரத்தை தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சிறப்பு அம்சமாக டிரைவர்கள் இல்லாத ரெயில்களை இயக்க மெட்ரோ ரெயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதில் முதல்கட்டமாக டிரைவர் இல்லாத 25 ரெயில்கள் இயக்கப்பட உள்ளன. இந்த வகை ரெயில்களை வடிவமைக்கவும், வாங்குவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. அதனைத்தொடர்ந்து 2½ ஆண்டுகளில் 6 ரெயில்களை வழங்கவும் உற்பத்தியாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டு உள்ளது.

### நிதி உதவி

இந்த ரெயில்கள் வந்தவுடன் கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு சொந்தமான பணிமனையில் தொடர்ச்சியான பலகட்ட சோதனைகள் நடத்தப்படும். அதனைத்தொடர்ந்து 'மெயின் லைனி'லும் பரிசோதிக்கப்படும். தொடர்ந்து 3 வழித்தடங்களிலும் ஒருங்கிணைந்த சோதனைக்கு உட்படுத்தப்படும். பின்னர் சுமார் 3 ஆண்டுகள் மற்றும் 7 மாதங்களில் பயணிகள் சேவைக்கு இந்த ரெயில்கள் இயக்கப்படும்.

மாதவரம் மற்றும் சோழிங்கநல்லூர் இடையேயான 52 கி.மீ. தூரத்திற்கும், மாதவரம் முதல் கோயம்பேடு வரை பணிகளை நிறைவேற்ற ஜப்பானை சேர்ந்த ஜெய்கா நிறுவனம் நிதியுதவி அளிக்கவுள்ளது. 30 சதவீதம் ஒப்பந்த அடிப்படையில் ரெயில்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:-

### தானியங்கி முறையில் செயல்படும்

சென்னையில் தற்போது இயக்கப்படும் ரெயில்களில் டிரைவர் ரெயிலை இயக்கவும், நிறுத்தவும் செய்வதுடன், ரெயில் கதவுகளையும் திறந்து மூடுவது உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் டிரைவர் இல்லாத ரெயில்கள் முழுமையாக தானியங்கி முறையில் இயங்கும்.

இந்த ரெயில்கள் வழியில் ஏதேனும் தடைகள் இருந்தாலும் கண்டறியும் திறன் கொண்டவை. இருந்தாலும் அவை தோல்வியில் முடிந்தால் டிரைவர்கள் மூலம் இயக்குவதற்கான கட்டுப்பாட்டு கருவிகளும் நிறுவப்பட உள்ளன. அதேபோல் 2-ம் கட்டத்தின் போது ரெயில்கள் இயக்கப்படும்போது பாதுகாப்பு கருதி தற்போது ரெயில்களுக்கு உள்ளே கேமரா இருப்பது போன்று வெளியேயும் கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

### டெல்லி மெட்ரோ

சென்னையில் தற்போது இயக்கப்பட்டு வரும் 4 பெட்டிகள் கொண்ட ரெயில்களில் 1,270 பயணிகள் வரை பயணம் செய்ய முடியும். தொடர்ந்து 2-ம் கட்டப்பணிகள் நிறைவடைந்து ரெயில்கள் இயக்கும் போது, முதல் கட்டமாக 3 பெட்டிகள் கொண்ட ரெயிலை இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது. தொடர்ந்து பொதுமக்கள் வரவேற்பை தொடர்ந்து 6 பெட்டிகள் கொண்ட ரெயிலாக அவை மாற்றப்படும். சாதாரணமாக 3 பெட்டிகள் கொண்ட ரெயிலில் 576 பயணிகள் நின்று கொண்டும், 144 பயணிகள் அமர்ந்து கொண்டும் பயணம் செய்ய முடியும். அதிகபட்சமாக 792 பேர் வரை பயணிக்க முடியும்.

அதேபோல் 6 பெட்டிகள் கொண்ட ரெயிலில் 1,152 பயணிகள் பயணிக்க முடியும். அதிகபட்சமாக 1,584 பயணிகள் வரை பயணிக்கலாம். நாட்டிலேயே முதல்முறையாக டெல்லியில் கடந்த மாதம் 28-ந்தேதி பிரதமர் நரேந்திர மோடி, டிரைவர் இல்லாத ரெயிலை கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார். டெல்லி மெட்ரோ ரெயில் நிறுவனம் தான் முதன்முறையாக டிரைவர் இல்லாத ரெயிலை இயக்குவது குறிப்பிடத்தக்கது. டெல்லியை தொடர்ந்து சென்னையிலும் டிரைவர் இல்லாத ரெயில் இயக்கப்பட உள்ளது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.